## வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் அறிவிப்பு

நாள்: 22.10.2024

பொருள் : தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து J–PAL South Asia நடத்தும் "**Identifying and Nurturing Math Talent**" திட்டம் தொடர்பாக.

---

<u>**அன்பான பெற்றோர்களுக்கு .**</u>

உங்கள் குழந்தை ________________ தமிழக பள்ளிக் கல்வித்துறை மற்றும் J–PAL South Asia எனும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து "கணிதத் திறமையை கண்டறிதல் மற்றும் மேம்படுத்தல்" திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்!

இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், கணிதத்தில் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு Art of Problem Solving (AoPS) என்ற ஒரு ஆன்லைன் தளத்தில் கணிதப் பாடங்கள் வழங்குவதும், அது அவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதுமே ஆகும். இந்த ஆன்லைன் வகுப்பை பயன்படுத்தும் போது மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த கற்றல் முறைகளை இலவசமாகவும், தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பைப் பெற முடியும். மேலும் கணித பாடத்தை எளிமையான முறையில் கற்றுக்கொள்ளவும் உதவும்.

இந்த ஆய்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, உங்கள் குழந்தைக்கு இந்தப் மேம்பட்ட பாட தொகுப்பு அடங்கிய புத்தகம் மற்றும் அதை சார்ந்த செய்முறை தாள் வழங்கப்பட்டுள்ளது. இந்த தாளில் பதில்களை உங்கள் குழந்தைகள் நிரப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த பதில்களை பதிவுசெய்ய மாணவர்களுக்கு ஆன்லைன் தளம் வழங்கப்பட்டுள்ளது. புத்தகத்தில் உள்ள QR குறியீடு மற்றும் இணைப்பு மூலம் போர்ட்டலை அணுகலாம். இதற்கு தங்கள் குழந்தைக்கு ஸ்மார்ட்போன் தேவைப்படும். இந்த வினாடி வினாவில் பங்கேற்க உங்கள் குழந்தைக்கு மொபைல் போனை வழங்கி உற்சாகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிரோம். மொபைல் போன் அணுகள் இல்லை என்றால், உங்கள் குழந்தை அவர்களது ஆசிரியரின் உதவியையும் பெற முடியும்.

இந்த கட்டத்தில் சிறப்பாக செயல்படும் மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். கூடுதலாக, புத்தகத்தில் சிறப்பாக செயல்படுவதோடு, ஒரு மாதத்திற்குப் பிறகு நடத்தப்படும் வினாடி வினா போட்டியிலும் சிறந்த திறனை வெளிப்படுத்தும் சில மாணவர்கள் முழு ஆன்லைன் தொகுப்புக்கள் அணுகல், பிரபலப் பல்கலைக்கழகங்களில்

படிக்கும் மாணவர்களின் வகுப்புகள் , மேலும் பல தலைப்புகள் கொண்ட கூடுதல் பாடப் பகுதிகள் ஆகியவற்றைப் பெறும் வாய்ப்பைப் பெறுவர்.

இந்த நிகழ்ச்சியில் உங்கள் குழந்தை பங்கேற்க உற்சாகப்படுத்துமாறு தங்களை கேட்டுக்கொள்கிறோம். இது உங்கள் குழந்தையின் கல்வி பயணத்தில் மாபெரும் உதவியாக அமையும் . இந்த பயிற்சி மற்றும் தேர்வுகள் அவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக அமையும் .

இந்தப் பாட தொகுப்பு சாதாரண பாடத்திட்டத்தைவிட சற்றே கடினமானவையாக உள்ளன. இது உங்கள் குழந்தையை சவாலான கணிதத்தை செய்து பார்க்க உதவியாக இருக்கும் . அவர்களின் திறனை மேம்படுத்த உதவுவதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது சில நேரங்களில் இவை கடினமாக தோன்றினாலும் அவர்கள் தங்கள் முயற்சியை வெளிபடுத்த தொடர்ந்து உற்சாகபடுத்துங்கள் .

**முதன்மை கல்வி அலுவலர்,** **தலைமை ஆசிரியர்**

**மாவட்டம் : வேலூர்.**